O.S.No.43/2017

வா.சா.3, திரு.வீரபத்திரன்
நாள் :11.02.2026 நேரம் : 10.57AM

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்

1. என்னை சாட்சியம் அழைக்க யார் அழைத்து வந்தது என்றால் நானான தான் வந்தேன். தாவா வழக்கில் சாட்சியம் அளிக்க எது சம்மந்தமாக வந்துள்ளேன் என்றால் தாவா சொத்திற்கு கிழக்கே கிரையம் பெற்றுள்ளேன். தெற்கே உள்ள சொத்தைஅனுபவம் செய்து வருகிறேன். தாவா வழக்கு நடைபெறுவது யார் கூறுயது என்றால் வாதியாகிய சீனிவாசன் கூறினார். சீனிவாசன் தான் என்னை சாட்சியம் அளிக்க அழைத்தார் என்றால் இல்லை. யாருக்கு வழக்கு நடந்தாலும் நான் சாட்சியம் அளிப்பேன் என்றால் சரியல்ல. நான் துணை வட்டாரவ வளர்ச்சி அலுவலராக பணிபுரிந்தேன் என்றால் சரிதான். தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன். நான் தாவா வழக்கு சொத்துக்கு கிழக்கேயும் தெற்கேயும் நான் அனுபவம் செய்வதற்கான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை,

2. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வ.சா.ஆ.3 ஆவணத்தில் ஏக்கர் 2 செண்டு 5 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள பிராது மற்றும் நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் தாவா சொத்து எந்த பக்கம் உள்ளது என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வ.சா.ஆ.10,6 ஆவணத்தில் தாவா சொத்து உட்பிரிவு ஆகியுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி உட்பிரிவில் எது எனது சர்வே எண் என்றால் 120/2 நான் கிரையம் பெற்றது. மேற்படி சொத்திற்கான ஆவணத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வ.சா.ஆ.10 ஆவணத்தில் 120/1 பி1 என்பது க.ஆண்டி, சோ.வந்தன் இவர்களின் பெயரில் உள்ளது என்றாலும் அவர்கள் வாதிகளின் வாரிசுகள் என்றாலும் சரிதான். 120/1 பி1 விஸ்தீரணம் 41.5 ஹெக்டேர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி பெயரில் வருவாய் ஆவணங்கள் உள்ளதா என்பதை நான் விசாரித்து விட்டு தான் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் இல்லை.

3. நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு என் பெயரில் தான் பட்டா, சிட்டா அடங்கல் வரிரசீது உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வாதிகள் பெயரில் பட்டா, சிட்டா மற்றும் அடங்கல் வரி ரசீது உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது வருவாய்துறை ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தால் வாதியின் அனுபவம் பற்றி தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. தாவா சொத்தை வாதிகள் எந்த காலத்திலும் அனுபவம் செய்யாததால் தான் வருவாய்துறை ஆவணங்கள் அவர்கள் பெயரில் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வாதி மற்றும் பிரதிவாதி அவர் அவர் சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தாவா வழக்கில் தரப்பினர் இல்லை என்பதால் எனது நிரூபண வாக்குமூலத்தில் பரிகாரம் பற்றி குறிப்பிட்டு செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க வந்துள்ளதால் எனது சாட்சியம் நிலைக்கதக்கது அல்ல என்றாலும் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றாலும் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 11.16 AM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2026.02.11 17:25:43 +0530